### ஆன்கோம் குரோப் கேர் நிறுவனம் உபகாரச் சம்பளம்

# இந்திய மாணவர்கள் 10 பேர் பெற்றனர்

பினாங்கு, பிப். 4-

கடந்த ஜனவரி 30ஆம் தேதி வெள்ளிக்கிழமை பினாங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆன்கோம் குரோப் கேர் (Ancom Crop Care) நிறுவனத்திடம் இருந்து பினாங்கைச் சேர்ந்த 25 பல்கலைக்கழக மாணவர்கள் உபகாரச் சம்பளம் பெற்றுக் கொண்டனர். இவர்களுள் 10 பேர் இந்திய மாணவர்களாவர்.



இந்நிறுவனத்தின் உபகாரச் சம்பளம் வழங்கும் நிகழ்ச்சியைத் தொடங்கிவைத்த பினாங்கு முதல்வர் செள கொன் இயோவிடம் இருந்து இவர்கள் விருதுகளையும் பெற்றுக் கொண்டனர்.

2024இல் இந்த உபகாரச் சம்பளத் திட்டம் தொடங்கப்பட்டது. 2024இல் 13 மாணவர்களும் கடந்த ஆண்டு 27 மாணவர்களும் உபகாரச் சம்பளம் பெற்றுக்கொண்டனர்.



உபகாரச் சம்பளத் திட்டத்தின் வழி கல்விச்சேவையில் தொடர்ந்து முனைப்புக்காட்டும் இந்நிறுவனத்தைப் பாராட்டுவதாக முதல்வர் செள குறிப்பிட்டார். பினாங்கின் வளர்ச்சிக்கு கல்வி எப்போதும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

பினாங்கைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் சாதாரண நிலையில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கின்ற நிலையில் அவர்களுக்கு இந்நிறுவனம் உபகாரச் சம்பளம் வழங்குவது பாராட்டுக்குரியது என்று அவர் தெரிவித்தார். இதற்கிடையே ஆன்கோம் குரோப் கேர் நிறுவனம் விவசாய ரசாயனங்களைத் தயாரித்து விநியோகிக்கும் நிறுவனம் என்றாலும் சமூகத்திற்கும் அது தனக்குள்ள கடப்பாட்டை நிறைவேற்றி வருகிறது என்று அந்நிறுவனத் தலைவர் டத்தோ டாக்டர் அப்துல் ஹாபிஸ் பின் அப்துல்லா தமதுரையில் தெரிவித்தார்.







அந்த வகையில் கல்வி மூலமாக தனக்குள்ள கடப்பாட்டை இந்நிறுவனம் நிறைவேற்றுவதில் மகிழ்ச்சி கொள்கிறது என்றும் அவர் சொன்னார். கல்வி ஆற்றல் மட்டுமன்றி நம்பிக்கை, எதிர்காலத்திற்கான ஆற்றல் ஆகியவற்றையும் ஏற்படுத்துவதில் இந்நிறுவனம் முனைப்புக் காட்டுகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

உபகாரச் சம்பளத் திட்டத்திற்காக இந்நிறுவனம் ஒரு மில்லியன் ரிங்கிட்டை ஒதுக்கி இருக்கிறது. தேர்வு செய்யப்படும் மாணவர்களுக்கு அதிகப்பட்சம் 10 ஆயிரம் ரிங்கிட் வழங்கப்படுகிறது.



உபகாரச் சம்பளம் பெற்ற இந்திய மாணவர்கள் வருமாறு:

1. அலரிஜா அமுதன். 2. அன் ஏஞ்சலியா மரியா கிரிஸ். 3. எர்னேஷா ஸ்ரீ ரமேஷ்குமார். 4. கிருஷ்ணா பேனியல் ரெங்கநாதன். 5. மாலினி கணேசன். 6. பவித்திரா சண்முகம். 7. ஷருவின் ராஜ் கோடீஸ்வரன், 8. தருனேஷ் ஸ்ரீ சங்கர். 9. தரணி முதுகன். 10. விரிண்டா மகேந்திரன்.









## மிஞ்சிய உணவுகளைச் சுத்தம் செய்து மீண்டும் சமைத்ததாகப் புகார்

### நெகிரி செம்பிலான் சுகாதார இலாகா விசாரணை

சிரம்பான், பிப். 4-

உணவகம் ஒன்றில் மிஞ்சிய உணவுகள் சுத்தம் செய்யப்பட்டு மீண்டும் விற்கப்பட்டதாகக் கூறப்படும் ஒரு வீடியோ பதிவு வைரலானதை அடுத்து நெகிரி செம்பிலான் சுகாதாரத்துறை அதுபற்றி விசாரித்து வருகிறது.

சிரம்பானில் உள்ள உணவகம் ஒன்றில் ஊழியர் ஒருவர் மிஞ்சிய உணவுகளைச் சுத்தம் செய்து அவற்றை மீண்டும் சமைத்து விற்பனை செய்திருப்பதாக சிலர் அந்த வீடியோ பதிவில் முறையிட்டிருக்கின்றனர்.

இதுபற்றி விசாரணை நடத்தப்படுகிறது என்று நெகிரி செம்பிலான் சுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர் ஸுராய்டா முகமட் கூறினார்.

இந்தச் சம்பவம் பற்றி தகவல் கிடைத்ததும் சுகாதாரத்துறை அதிகாரிகள் அந்த இடத்திற்கு அனுப்பப்பட்டு விசாரணை செய்யும்படி உத்தரவிடப்பட்டிருக்கின்றனர். சமூக ஊடகங்களில் பரவிய இந்தக் குற்றச்சாட்டு உண்மைதான் என்றால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். பொதுமக்களும் சரியான வழியில் புகார்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

சம்பந்தப்பட்ட உணவகத்தின் ஊழியர் ஒருவர் மிஞ்சிய உணவுகளை மீண்டும் சமைத்து விற்பதற்காக சுத்தப்படுத்திக் கொண்டிருந்ததாக சிலர் அந்த வீடியோ பதிவில் கூறியிருக்கின்றனர். அந்த உணவகத்தின் ஊழியர் கோழி இறைச்சி, ஆட்டிறைச்சி, தவ்வு போன்ற மிஞ்சிய உணவுகளைச் சுத்தம் செய்து ஒரு பானையில் அவற்றை வைத்ததைத் தாம் பார்த்ததாக சமூக ஊடகப் பதிவாளர் ஒருவர் கூறியிருக்கிறார்.

ஆரம்பத்தில் அந்தத் தொழிலாளி குழப்பமான பதிலைத் தந்தார். அதன் பின் தடுமாற்றத்தில் அந்த உணவை மீண்டும் சமைக்கப்போவதையும் ஒப்புக்கொண்டார். அதில் ஆபத்து இல்லை எனவும் அவர் கூறிக்கொண்டார். மிஞ்சிய உணவுகளை இப்படி மீண்டும் சமைத்து விற்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இது பொதுமக்கள் சுகாதாரத்திற்கு ஆபத்தை விளைவிக்கும் என்று அந்தச் சமூக ஊடகப் பயனீட்டாளர் கூறியிருக்கிறார்.

### குறைந்த மாணவர்கள் கொண்ட பள்ளிகள்:

# இடமாற்றம்?

கிருஷ்ணன் ராஜு

ஜோகூர் பாரு, பிப்.4-

மிகக் குறைந்த மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட தொடக்கப் பள்ளிகளின் இடங்களை மாற்ற கல்வி அமைச்சகம் கேபிஎம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக துணைக் கல்வி அமைச்சர் வோங் கா வோ தெரிவித்தார்.

ஐந்து முதல் 10 மாணவர்களுக்கும் குறைவான மாணவர் எண்ணிக்கையுள்ள பள்ளிகளின் விஷயத்தில், கல்வி அணுகலை மேலும் பயனுள்ளதாகவும் தரமான கல்வி வழங்கவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அவர் கூறினார். அத்தகைய பள்ளிகளை இடமாற்றம் செய்யும் முன், பள்ளி நிர்வாகம், பெற்றோர் , உள்ளூர் சமூகத்தினரின் ஒப்புதல் பெறப்படும் என்றும் அவர் விளக்கினார்.

ஐந்து அல்லது 10-க்கும் குறைவான மாணவர்கள் உள்ள பள்ளிகளின் விஷயத்தில், இடமாற்றம் செய்ய பள்ளி தரப்பின் ஒப்புதலைப் பெறும் வழிகளை கல்வி அமைச்சு நாடும். நாட்டின் எந்த மூலையிலும் கல்வி அணுகல் கிடைக்க வேண்டும் என்பதே கேபிஎம்மின் உறுதிப்பாடு என்றார் அவர்.

பள்ளிகளை இடமாற்றம் செய்வது கல்வி நிலையங்களை மூடுவதற்காக அல்ல என்றும் மாணவர்களுக்கு சிறந்த வசதிகள், உகந்த கற்றல் சூழல், பிற பகுதிகளிலுள்ள மாணவர்களுக்கு சமமான கல்வி வாய்ப்புகளை வழங்குவதே இதன் நோக்கம் என்றும் வோங் கா வோ தெரிவித்தார்.

மாணவர் எண்ணிக்கை குறைவாக இருப்பதைக் காரணமாகக் கொண்டு எந்தப் பள்ளியும் மூடப்படாது என்றும் அவர் உறுதியாகக் கூறினார். இது தேசியப் பள்ளிகள் (தேசிய வகை), சீன தேசிய வகைப் பள்ளிகள் , தமிழ் தேசிய வகைப் பள்ளிகள் அனைத்துக்கும்



பொருந்தும் என்றார்.

எஸ்கே, எஸ்ஜேகேசிஅல்லது எஸ்ஜேகேடி என எந்தப் பள்ளியும் மாணவர் எண்ணிக்கை குறைவாக இருப்பதற்காக மட்டும் மூடப்படாது. மாணவர்கள், ஆசிரியர்கள், உள்ளூர் சமூகத்தின் நலனுக்காக கலந்தாலோசித்து சிறந்த தீர்வை எடுப்பதே முக்கியம் என்றார் அவர்.

### மேயர் பதவிக்குத் தேர்தலா?

# தேன்கூட்டில் கவைக்காதீர்

கோலாலம்பூர், பிப்.4-

கோலாலம்பூர் டத்தோ பண்டார் (மேயர்) பதவிக்கு தேர்தலை நடத்தும் பரிந்துரைக்கு அம்னோ உலாமா மன்றத் துணைத்தலைவர் டத்தோ டாக்டர் கைருடின் தக்கிரி கண்டனம் தெரிவித்தார்.

இந்தப் பரிந்துரை முன்வைக்கப்பட்டிருக்கக்கூடாது. ஏனெனில் ஒற்றுமை அரசாங்கத்தின் கூட்டணிக் கட்சியின் நிலைப்பாட்டிற்கு இது முரண்பாடாக உள்ளது, ஆகவே அமைச்சர் அவர்களே, கூட்டணிக் கட்சி இணக்கம் தெரிவிக்காத ஒரு விஷயத்தைத் தூக்கி வீசி தேன்கூட்டில் கைவைக்க வேண்டாம் என அவர் கேட்டுக் கொண்டார்.

அவர் நேற்று முன்தினம் தனது சமூக ஊடகப் பதிவில் இதனைத் தெரிவித்தார். ஊராட்சி மன்றத் தேர்தலையும் கோலாலம்பூர் மேயர் பதவிக்கான தேர்தலையும் நடத்த வேண்டிய அவசியம் ஏதும் இல்லை என்றார் அவர்.



